**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**////////////**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU**

**Calendar**

**Miscellaneous**

**Preliminary Register** **Case No.C.C. 85 of 2024 PW :1**

**Sessions**

**Prosecution**

**Deposition of witness for Defence**

**Court**

**Name : திரு. வெங்கடேசன்**

**Father's Name : திரு. சுப்பிரமணி**

**Village :**

**Taluk :**

**Calling :**

**Age : 44**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.06.2026.**

**தேதி. 05.06.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 85/2024, அ.த.சா.1. திரு. வெங்கடேசன் த/பெ. திரு. சுப்பிரமணி வயது 44 அவர்களை சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கரிம்பேடு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 எனது மனைவி ஆவார். கடந்த 28.07.2024 அன்று காலை 11.00 மணியளவில் நானும் எனது பெற்றோர்களும் மற்றும் எனது மனைவி வீட்டில் பின்புறம் விறகு வெட்டிக்கொண்டிருந்தோம். அச்சமயம் ஒரு பெண் வந்து என்னிடம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்டார். நான் சென்று சமையல் அறையில் இருந்து தண்ணீர் எடுத்து வருவதற்குள் பிரிட்ஜ் மேல் இருந்த எனது மகளின் செயினை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். இது குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரி காவல் நிலையம் அன்றே சென்றேன். ஆனால் காவல் நிலையத்தில் ஆடிக் கிருத்திகைக்காக போலிசார் திருத்தணி சென்றுள்ளதால் 3 நாட்கள் கழித்து புகார் அளிக்க கூறினார்கள். அதனால் நான் 03.08.2024 அன்று காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்தது தான். **அது அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரரணை செய்தார்கள். சம்பவ சமயத்தில் என் வீட்டில் வந்து என்னிடம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்ட பெண்ணை நான் பார்த்தேன். தற்போது நீதிமன்றத்தில் நான் அந்த பெண்ணை பார்த்தால் அடையாளம் காண்பிப்பேன். பின்னர் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் இருந்து எனது நகையை எடுத்துச்சென்ற பெண்ணை பிடித்து வைத்திருப்பதாகவும் அவரிடம் இருந்து அவரிடம் இருந்து நகையை கைப்பற்றியதாகவும் கூறியதின் பேரில் நானும் எனது மனைவியும் காவல் நிலையம் சென்றோம். அங்கு சென்று இந்த வழக்கின் எதிரியையும் எனது நகையையும் அடையாளம் காண்பித்தேன். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு புகைப்படங்களில் உள்ள செயின் தான் எனது வீட்டில் இருந்து காணாமல் போனதாகும். அது

**அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது என்னிடம் காட்டப்படும் படிவம் 82 ல் உள்ள நகை தான் அன்றைய தினம் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக்கொண்டது. **அது அ.சா.பொ.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது குறித்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்த பிறகு அங்கேயே விசாரணை செய்தார்கள். தனிப்பட்ட முறையில் வேறு எங்கும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் 5 நாட்கள் கழித்து தான் காலதாமதமாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். நான் எனது புகாரில் களவாடப்பட்ட சொத்து என்ன வகையான நகை மற்றும் நகையின் மதிப்பு என்ன என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டு கூறியுள்ளேன். காணாமல் போன 1 ½ சவரன் நகை எனது பெயரில் உள்ளதற்கான பில் எதுவும் இல்லை என்றால் எனது மச்சான் எனக்கு விசேசத்திற்காக எடுத்துக்கொடுத்தார். எனது மச்சான் அதற்கு ஆதரவாக பில் ஏதாவது விசாரணையின் போது கொடுத்தேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் சென்றபோது காவல் துறையினர் திருடிச்சென்ற பெண்மணியை அங்கு அடையாளம் காட்டினார்கள். ஒரு பத்து அல்லது 5 நபர்களை வைத்து அடையாள அணிவகுப்பு நடத்தி என்னிடம் காட்டவில்லை என்றால் சரிதான். நான் எனது புகாரில் எனது நகையை திருடி சென்றுவிட்டதாக தான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் எனது நகையை பெறவில்லை. நீதிமன்றதில் தான் பெற்றுக்கொண்டேன். நான் அளித்த புகார் நான் கைப்பட எழுதவில்லை என்றாலும் போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். எனது நகை கிடைத்துவிட்டதன் காரணமாக போலிசார் அழைத்ததின் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் முழு

விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கூறியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

புகாரில் உள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் போலிசார் எழுதினார்கள். எனக்கு தமிழ் எழுத படிக்கத்தெரியாது. எனக்கு தெலுங்கு தான் தெரியும்.

**ஒப்பம் – K. வெங்டேசன், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**
**பள்ளிப்பட்டு(FAC)**